**"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"**

**- 2 தீமோ 3 : 12**

எதிர்ப்பு எதிர்பார்க்கப்பட வேண்டியதாயிருக்கிறது. சந்தேகமில்லாமல், மரணத்தில் நமது ஒட்டத்தை முடிக்கும்வரை அது தொடரும். இப்பொழுது இருக்கிற ஜீவியத்தின் சிநேகத்துக்காகவும் இன்பங்களுக்காகவும் இருக்கிற நமது சொந்த இயல்பான விருப்பங்களை தியாகம் செய்வதும், கர்த்தரின் சித்தத்தைச் செய்வதற்கும் அவருடைய ராஜ்யத்துக்கடுத்த காரியங்களை சொல்லும் வேலையில் நமக்கிருக்கும் முயற்சியில் எந்த மாதிரியான உருவத்தில் தீங்கு வந்தாலும், நல்ல போர் சேவகர்களாக, சத்தியத்தின் நிமித்தமாக தீங்கனுபவித்தோமானால், எதிர்ப்புக்கு பொறுமையோடு தாழ்ந்து போகலாம். உண்மையாகவே கர்த்தருடைய ஊழியத்திலிருப்பது மூன்று காரியங்களை கொண்டதாக இருக்கிறது. முதலாவது, தேவனுடைய ஏற்பாட்டை கவனமாகவும் தொடர்ந்தும் தியானிப்பது, இரண்டாவது அதன் ஆவியை கிரகித்துக் கொள்ளுவது மூன்றாவது, அதன் நிறைவேறுதலுக்காக ஊக்கமுள்ள உற்சாகத்துக்கும் அதன் வேலையில் நஷ்டமோ, தியாகமோ எதுவாகிலும் வேண்டியிருந்தாலும், நமது திறமைக்குத்தக்க சுறுசுறுப்பான செயலுக்கு நடத்துவது.

**-Z ’03, 164(R 3199)**

கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்கள் பிரதிஷ்டை செய்திருக்கிற ஜனங்கள். அனுகூலங்கள் அநீதியின் பக்கத்திலும், பிரதிகூலங்கள் நீதியின் பக்கத்திலும் வைக்கப்பட்டிருக்கிற ஒரு உலகத்தின் மத்தியில் அவர்களுடைய பிரதிஷ்டை அவர்களை நீதிக்காகத் தியாகிகளாக்குகிறது. பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களின் போக்கினால், சுயநலக்காரரர் அவர்களை பகைக்கிறார்கள். ஆகவே பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களின் போக்கு துன்பப்படுதலை தவிர வேறென்றாய் இருக்க முடியாது. இவ்விதமாக உண்மையாயிருக்கும் யாவரும் துன்பப்படுவார்கள்.

**- P’35, 62.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

ஆதி 49:23; யோபு 12:4,5; சங் 11:2; 37:32; 38:20; 44:15-18,22; நீதி 29:10,27; ஏசா 29:20,21; 51:12,13; 59:15; எரே 20:8; மத் 5:10-12,44; 10:16-18,21-23; 28; 24:8-10; லூக் 6:22,23; யோவா 15:18,19; 16:1,2; அப் 28:22; ரோம 8:17,35-37; 1கொரி 4:9-13.

**கோபுர வாசிப்பு :** Z ’12, 323(R 5116).

**வினாக்கள் :** தேவ பக்தியுள்ள ஜீவியம் இவ்வாரத்தில் எனக்குத் துன்பம் கொண்டு வந்ததா? அதில் எனக்கு உதவியாகவும், இடையூறாகவும் இருந்தது எது? அதை நான் எப்படி சகித்தேன்? அதனுடைய பலன்கள் என்ன?